செ.வெ.எண்.171/2009(செமதொஅ) நாள் :17.06.2009.

# நாட்டு நலப்பணித் திட்ட மாபெரும் கோடை முகாம் ஜூன் 22 முதல் ஜூலை 3 வரை நடைபெறவுள்ளது – ராஜூவ்காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு மைய இயக்குநர் திரு.ராஜசேகரன் இ.ஆ.ப. அவர்கள் தகவல்

இந்திய அரசின் அங்கமான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகத்தின் கீழ் நாட்டு நலப்பணித் திட்டத்தின் வாயிலாக பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வளர்களை மேலும் ஈர்க்க ஒரு முயற்சியாகவும், அவர்களின் திறன்களையும், ஆளுமைகளையும் மேம்படுத்த இம்மாபெரும் 12 நாள் கோடை முகாம் மத்திய அரசு ராஜூவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து ஜூன் 22 முதல் ஜூலை 3ந் தேதி வரை ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜூவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு மைய வளாகத்தில் நடைபெற உள்ளது. இதில் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் 15 நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்கள் வீதம் மொத்தம் 400 இளைஞர்கள் பங்குபெற உள்ளார்கள். இம்மாபெரும் கோடை முகாமை மாண்புமிகு மத்திய இளைஞர் நலன் மற்றும் இணை அமைச்சர் டாக்டர்.எம்.எஸ்.கில் மற்றும் இணை அமைச்சர் மாண்புமிகு பிரதீத் பிரகாஷ்பாபு பட்டீல் மற்றும் துறைச் செயலர் ஆகியோர் ஜூன் 22ம் தேதி காலை 10 மணியளவில் துவக்கி வைக்க இருக்கின்றனர்.

இம்முகாமின் சிறப்பு: இதில் பங்குகொள்ளும் இளைஞர்களுக்கு தன்னார்வலம், குடிமையியல், சுகாதாரம், வேலை வாய்ப்புத்திறன் மேம்பாடு, சுற்றுச்சூழல் மற்றும் ஊரக வளர்ச்சி ஆகியவற்றை குறித்து விரிவான பயிற்சியும், இளைஞர் முழு ஆளுமை தன்மை மேம்பாட்டுக் கல்வி, கலாச்சாரம் குறித்தும் பயிற்சிகள் ராஜூவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் அளிக்கிறது. மேலும், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளிலுள்ள தொழில் மற்றும் உற்பத்தி நிறுவனங்களை பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் இளைஞர்கள் அறிவியல் தொழிற்நுட்ப வளர்ச்சிக் குறித்தும் விழிப்புணர்வு பெறுவர். மாணவர்களின் உடல் மற்றும் மனவலிமையை மேம்படுத்த உடல்பயிற்சி மற்றும் யோகா பயிற்சியும் இம்முகாமில் அளிக்கப்படவுள்ளது. ஸ்பிக் மாகே அமைப்புடன் இணைந்து பல்வேறு கலாச்சார கலைநிகழ்ச்சிகளும் இம்முகாமில் நடைபெறவுள்ளது. இதில் பங்கு கொள்ளும் மாணவ-மாணவிகள் சென்னை, கோவை, கொச்சி, திருவனந்தபுரம், கன்னியாகுமரி மற்றும் மதுரை ஆகிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை பார்வையிட ஜூன் 28 முதல் ஜூலை 3ந் தேதி வரை இரு குழுக்களாக பிரிந்து கல்வி பயணமாக சென்று பார்வையிட உள்ளனர் என ராஜூவ்காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு மைய இயக்குநர் திரு.ராஜசேகரன் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார். உடன் ராஜூவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு மைய துறைத் தலைவி திருமதி.வசந்தி ராஜேந்திரன் இருந்தார்.

செய்தி வெளியிடுபவர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.